**O.S.No.254/2009**

**Date:20.07.2018**

வாதி தரப்பு சாட்சி 2 - முருகன், த-பெ.பிச்சைராமன்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

13ம பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கு தகவல் சொன்னது என் சகோதரர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாகவும், முழுமையாகவும் தெரியும். தாவாச் சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்றால் வி.எம்.கோபாலகிருஷ்ணன் டிரஸ்ட்டுக்குப் பாததியப்பட்டிருந்தது. அந்த சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததா என்றால் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்குத் தெரியாது. டிரஸ்ட் சொத்துக்களை விற்பதற்கு என்னென்ன சொத்துக்களின் சர்வே எண்களை விற்பதற்கு அனுமதி வாங்கப்பட்டது என்றால் சர்வே எண்.158-1, 158-2 ஆகும். சர்வே எண்.158-1ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 76 செண்டு ஆகும். சர்வே எண்.158-1ல் மொத்த விஸ்தீரணம் 8 ஏக்கர் 45 செண்டு என்றால் தெரியவில்லை. வி.எம்.கோபாலகிருஷ்ணன் டிரஸ்ட்டிலிருந்து என்னென்ன சொத்துக்களுக்க ஒப்படை செய்ய அனுமதி வாங்கினார் என்பதற்கான வழக்கின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளோமா என்றால் நகல் தாக்கல் செய்துள்ளோம், சான்றிட்ட நகல் தாக்கல் செய்யவில்லை. அந்த சான்றிட்ட நகல் தாக்கல் செய்தால்தான் எந்தெந்த சொத்துக்களை விற்பனை செய்யத வி.எம்.ஜி.டிரஸ்ட் அனுமதி வாங்கியுள்ளது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் 13ம் பிரதிவாதி காஜா உரிமைகோரும் சொத்துக்கும், நான் உரிமை கோரும் சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சம்பந்தம் உள்ளது. 13ம் பிரதிவாதி என்ன சர்வே எண்ணில் கட்டுப்பட்ட எவ்வளவு விஸ்தீரணத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சர்வே எண்.158-1ல் 45 செண்டு கிரையம் பெற்றுள்ளார். அந்த இடம் தென்வடல் நத்தம் ரோட்டிற்கு கிழக்குப்பக்கம் உள்ளது என்றால் சரிதான். 03.10.1983ல் வா.சா.ஆ3ன்படி நாங்கள் தாவாச் சொத்தை கிரையம் வாங்கியுள்ளதாகச் சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. 13ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தின் மீது எங்களுக்கு எந்தவிதமான உரிமையும் பாத்தியதையும் கிடையாதுன என்றால் சரியல்ல. டிரஸ்ட் வழக்கு எண்.117-1981ல் பெற்றுள்ள நீதிமன்ற அனுமதியின்படி வழக்கிடைச் சொத்தை வி.எம்,ஜி.டிரஸ்ட் எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்திருப்பதாகச் சொல்லியிருப்பது பொய்யானது

என்றால் சரியல்ல. எங்கள் கிரையப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து சம்பந்தமாக மேற்படி டிரஸ்ட் வழக்கில் எந்தவிதமான அனுமதியும் வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் பெயரிலும் மற்ற வாதிகள் பெயரிலும் பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளதாகவும், எனவே தாவாச் சொத்திற்கு நாங்கள் தான் சுவான்தாரர்கள் என்று கூறுவது பொய்யானது என்றாலும், தாவாச் சொத்திற்கு நாங்கள் சுவான்தாரர்கள் இல்லை என்று கூறினால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டு, பட்டா வழங்கப்பட்டுள்ளதாக கூறுவது பொய்யானது என்றாலும், அந்த உட்பிரிவுகள் இந்த பிரதிவாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.26 முதல் 32 வரையிலான ஆவணங்களுக்கும் தாவாச் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும், அந்த ஆவணங்கள் இந்த 13ம் பிரதிவாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வி.எம்.ஜி.எஸ்.இந்திராணியம்மாள் 29.06.2007ல் தினத்தந்தி நாளிதழில் அறிவிப்பு கொடுத்துள்ளதாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.33 அறிவிப்பிற்கு 11.10.2007ல் தினத்தந்தி நாளிதழில் மறுப்பு கொடுத்துள்ளதாக கூறுவதும் பொய்யானது என்றர்ல சரியல்ல. தினதந்தி நாளிதழில் மறுப்பு அறிவிப்பு கொடுத்துள்ளதாக பிராதில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.33 அறிவிப்பு இந்த வழக்கிற்காக நான் உற்பத்தி செய்த புகைப்பட நகல் என்றாலும், இந்த அறிவிப்பு எந்த நாளிதழிலும் வெளியாகவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.34 அறிவிப்பு நான் கொடுத்துள்ளதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் என்ன சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சர்வே எண்.158-1 அல்லது சர்வே எண்.158-1பா என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த சர்வே எண்.158-1ல் நான் சொத்துக்கள் எதுவும் கிரயம் வாங்காததால்தான் அந்த சர்வே எண்ணைப் பற்றி வா.சா.ஆ.34ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.34ல் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கும், விஸ்தீரணத்திற்கும், 13ம் பிரதிவாதியின் சொத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.35 கடிதத்தை 1ம் வாதிதான் அனுப்பியதாக காட்டப்பட்டுள்ள அறிவிப்பு என்றால் சரிதான். இந்த அறிவிப்புடன் தபால் ரசீது எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.35 முதல் 40 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.41 முதல் 46 வரையிலான ரசீதுகளுக்கும், வா.சா.ஆ.35 முதல் 40 வரையிலான கடிதங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.47 முதல் 49 வரையிலான ஒப்புதல் அட்டையை வி.எம்.ஜி டிரஸ்ட் ஒப்புக் கொண்டதற்கான முத்திரை இடப்படவில்லை என்றால் முத்திரை இல்லை. இதில்

உள்ள கையெழுத்து இந்த நபரினுடையது என்று என்னால் அறுதியிட்டு சொல்ல முடியாது என்றால் சொல்ல முடியாது. எனவே இந்த வா.சாஆ.47 முதல் 49 ஒப்புதல் அட்டைகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்றாலும், இந்த ஒப்புதல் அட்டைகள் எங்களால் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.50 வரைபடத்தில் சர்வே எண்.158க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வரைபடத்திற்கும், 13ம் பிரதிவாதி உரிமை கோரும் சொத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.3 மூலமாக வி.எம்.ஜி.டிரஸ்ட்டிடமிருந்து சொத்து வாங்கியதாகவும் அந்த சொத்துதான் வா.சா.ஆ.50ல் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருளப்பன் சுப்பிரமணியன் ஆகியோர் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகச் சொலலியுள்ளதில் அந்த வழக்கிற்கும், இந்த 13ம் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது, அதில் அவர் தரப்பினரும் கிடையாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் மீது எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றாலும், நான் தாவாச் சொத்தின் உரிமையாளரும் கிடையாது என்றால் சரியல்ல. 13ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பிராது சொத்தின் உரிமையாளர் நான் இல்லை என்பதால் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.